DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | | |
|---|---|---|
| Calendar | | --- |
| Miscellaneous | | --- |
| Preliminary Register | : | **CC 383/2020** |
| Deposition of Witness for | : | PW 10 |
| Name | : | திரு.ஜெயம் பாண்டியன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 21.07.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 21 July 2026.

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

(எதிரி தரப்பு எந்தவொரு ஆட்சேபனை இல்லாமல் **Video Conference மூலம் பதிவு செய்யப்பட்டது)**

<u>முதல்விசாரணை:</u>

நான் தற்போது மதுரை மாவட்டம் ஒத்தக்கடை காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு அய்யாபுரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிரிந்த போது குற்ற எண்.92/2019–ன் அடிப்படையில் வழக்கை புலணாய்வு செய்த யோபு சம்பத் ராஜ் என்பவர் அவர் சாட்சிகளை விசாரணை செய்து மேல்விசாரணைக்காக என் பார்வைக்கு வழக்கு கோப்பினை வைத்தார். அதன் அடிப்படையில் மேல்விசாரணைக்கு எடுத்து

கொண்ட நான் கடந்த 19.02.2020–ம் தேதி சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் காயம் பெற்ற வேலுசாமி என்பவருக்கு சிகிச்சை அளித்த டாக்டர்.அருண்பாண்டியன் என்பவரிடம் காயத்திற்கு ஏற்ற காயச்சான்றிதழ் பெற்று மேலும் மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு டாக்டர். பால சுப்பிரமணியன் என்பவர் கொடுத்த காயச்சான்றிதலுக்கு ஏற்ப இவ்வழக்கின் சட்டப்பிரிவினை 294(பி), 323, 324, IPC–ல் இருந்து 294(பி), 325, 326 IPC யாக மாற்றம் செய்து அறிக்கை தாக்கல் செய்தேன். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.9 ஆகும்**. அத்துடன் வழக்கு விசாரணை முடித்து 19.02.2020–ம் தேதி எதிரிகள் மீது இ.த.ச .பிரிவுகள் 294(பி), 325, 326–ன்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

இரண்டு மருத்துவரையும் 18.02.2020–ம் தேதி விசாரித்தேனா என்றால் இல்லை. மருத்துவரிடம் X–ray report. X–ray பிலிம் எதையும் வாங்கி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். காயம் பெற்ற நபர் வெளிநோயாளியா சிகிச்சையில் இருந்தாராக என்றால் அவர் உள்நோயாளியாகத்தான் இருந்தார். அவர் மேல் சிகிச்சைக்காக Refer செய்யவில்லை என்றால் சரியல்ல. Refer செய்து தான் அனுப்பியுள்ளார். அந்த Refer–யை நான் பாத்தேனா என்றால் அந்த Wound certificate–ல் குறிப்படிப்பட்டுள்ளது. நான் சொல்வதுபோல் Wound certificate–ல் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. ஆவணங்கள் அடிப்படையில் தான் நான் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அ.சா.1–க்கு சுண்டுவிரலிலோ, முழங்கையிலோ காயம் இருந்ததாக அ.சா.1–ன் புகாரில் துலங்குமா என்றால் துலங்காது. நான் இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட ஆயுதங்களை கம்பையோ, கல்லையோ, மருத்துவரிடம் காண்பித்து கருத்து கேட்கப்பட்டதா என்றால் இல்லை. நான் மற்ற சாட்சிகளை விசாரிக்கவில்லை

என்றால் சரிதான். எனது இறுதி அறிக்கை சட்டத்திற்கு புறம்பானது அரைகுறையானது என்றால் சரியல்ல. நான் சொல்லக்கூடிய நாள், நேரத்தில் இந்த வழக்கின் மேல்விசாரணைக்காக எடுத்துகொண்டதாக சொல்வதும், மருத்துவரை விசாரித்து இறுதியறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றாலும், எனது விசாரணை ஒருதலைபட்டமானது என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil.